නිවාස හා සමෘද්ධි අමාත්‍යාංශය
வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு
Ministry of Housing & Samurdhi

4 මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
4 வது மாடி செத்சிரிபாய பத்தரமுல்ல
4 floor, Sethsiripaya ,Battaramulla

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
Department of Divineguma Development

මගේ අංකය
எனது இல
MY NO. DDD/HO/07/SD/03/DP

ඔබේ අංකය
உமது
Your No

දිනය
திகதி
Date 2015-06-22

மாவட்டச் செயலாளர்/ வாழ்வின் எழுச்சி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி
மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்
……………………………

## தேசிய வீடமைப்பு தின வேலைத்திட்டம் – 2015

தேசிய வீடமைப்புத் தினமாக ஒவ்வொரு வருடமும் ஜீன் மாதம் 23ம் திகதி பிரகடணப்படுத்தப்பட்டுள்ளதுடன் அன்றைய தினத்திலிருந்து ஒரு வாரத்திற்குள் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் மூலம் பல்வேறு தலைப்புக்களின் ஊடாக நாடு தழுவிய ரீதியில் பல வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதன் தேசிய வைபவம் 2015.06.23ம் திகதி அம்பாந்தோட்டையில் மாண்புமிகு பிரதம மந்திரி மற்றும் கௌரவ வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் பொருட்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தங்களது பங்களிப்பினை வழங்குமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

I. எனது சம இலக்கமும் 2015.06.16ம் திகதியிடப்பட்டதுமான துரித வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம் (திரிய பியச) – 2015 என்ற கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அதற்குரிய நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல். (இங்கு அந்த வேலைத்திட்டத்தில் மகளிரை மையமாக வைத்து மேற்கொண்ட வேலைத்திட்டங்களின் பொருட்டு முன்னுரிமை வழங்கி 2015.06.24ம் திகதியில் தங்களது விருப்பதின் பிரகாரம் மாவட்ட வேலைத்திட்டம் ஒன்றினையும் பிரதேச செயலாளர்களை விளக்கமளித்து பிரதேச செயலக மட்டத்திலும் வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்)

II. அதனோடு இணைந்ததாக ஏற்கெனவே தங்களால் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள திரிய பியச வீட்டுக்கு உரியதாக ஆகக் குறைந்தது ஒரு வீட்டின் வேலை ஒன்றையாவது ஆரம்பித்தல்.


| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி / Additional Director General | අධ්‍යක්ෂ (පාලන) / பணிப்பாளர் (நிர்வாகம்) / Director (Administration) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|
| දුරකථන/ தொலைபேசி/Telephone: | 011-2872202 | 011-2861994 | 011-2873799 | 011-2889046 |
| ෆැක්ස්/ தொலைமடல்/Fax: | 011-2889002 | | 011-2873996 | |
| ඊ-මේල්/ மின்னஞ்சல்/E-Mail: | dgdivineguma@gmail.com | anuradhakum@yahoo.com | hrddivineguma@gmail.com | |

III. பெண்களை மையமாகக் கொண்டு வீட்டு முகாமைத்துவம் மற்றும் குடும்ப அபிவிருத்தியினை தலைப்பாகக் கொண்டு விளக்கமளிக்கும் வேலைத்திட்டங்களை பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஒழுங்கு செய்தல். (இதற்கான வளனர்களின் கொடுப்பனவின் பொருட்டு ரூபா. 2500/= வீதம் ஒரு பிரதேச செயலகப் பிரிவுக்கு நிதி ஒதுக்கீடு அனுப்பப்படுவதுடன் பட்டறையின் பொருட்டு உயர்ந்த பட்சம் ரூபா. 10,000/= இற்கு உட்பட்டதாக சமூக அபிவிருத்தி மன்றத்திலிருந்து செலவிட முடியும்)

IV. மேற்படி வேலைத்திட்டத்திற்கு ''சிறுவர் தினம்'' என கருதப்படும் 2015.06.27ம் திகதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்படுகின்ற சிறார்களின் ஆற்றல்களை வெளிக் கொணரும் வேலைத்திட்டங்களின் பொருட்டும் கெக்குலு கழக சிறார்களை ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

V. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தங்களது மாவட்டத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்படுகின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் அவற்றின் செயற்பாட்டு நேரங்கள் தொடர்பான தகவல்களை துரிதமாக எனக்கு அறிவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன். அத்துடன் பிரதேச அரசியல் அதிகாரமுள்ளவர்களையும் விளக்கமளிக்கவும்.



தம்மிக்க குணவர்த்தன
பதில் பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

01. செயலாளர், வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு - த.கூ.க.பொருட்டு
02. தலைவர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை - உ.ந.பொருட்டு
03. மேலதிக செயலாளர் (வீடமைப்பு) - த.கூ.க.பொருட்டு
04. வீடமைப்பு மற்றும் சமுர்த்தி கௌரவ அமைச்சின் பிரத்தியேக செயலாளர்கள் - கௌரவ அமைச்சர் அவர்களை விளக்கமளிக்கும் பொருட்டு.